தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, பிப்ரவரி 8, புதன்கிழமை

தை 26, விபவ—திருவள்ளுவராண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–00 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. கே. ரமணி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1, உறுப்பினர் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே, ரமணி) : இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால் அவர்கள் இப்போது உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். அரசியலமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் பேரவையில் அமரக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் இப்போது உறுதிமொழி எடுத்துக் கொள்வார்.

பின்னர் திரு. பி. வி. இராஜேந்திரன் உறுதிமொழி* எடுத்துக் கொண்டார்.

2. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே. ரமணி) : அடுத்து, பேரவையின் இன்றைய அலுவல் ‘‘ அரசியலமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல் ’’ ஆகும். இப்பதவிக்கு வேட்பாளரின் வேட்புத் தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதிகளில் 7-வது விதி, உள் விதி 4-ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், அதை வழி மொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப் பெற்றவர் ..	டாக்டர். மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்
முன் மொழிந்தவர்	மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி
வழி மொழிந்தவர்	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்

---

*உறுதிமொழி கடவுள் பெயரால் எடுத்துக் கொள்ளப் பெற்றது

(தற்காலிகப் பேரவைத்தலைவர்] [1989 பிப்ரவரி 8

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால், டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இத்துடன் என்னுடைய அலுவல் முடிகிறது. இப்போது இப்பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களும் அழைத்து வந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எழுந்து நிற்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்ந்த பின், எல்லோரும் அமர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்—(மேசையைத் தட்டும் ஒலி)

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத தலைவர் தேர்தலாகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்காக வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவையின் விதி 8, உள் விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். அதன் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப்பெற்றவர்	..	திரு. பி. துரைசாமி
முன்மொழிந்தவர்	.. ..	மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
வழிமொழிந்தவர்	.. ..	மாண்புமிகு திரு. துரைமுருகன்

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப் பெற்றிருப்பதால் திரு. பி. துரைசாமி அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்